மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 177/2015

பெயர் : சுதா
சாட்சி – வா.சா–2 நாள்: 05.11.2025

---

**குறுக்கு விசாரணை (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு)**

1. நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தந்தை என 2ம் வாதி ரங்கசாமி கேட்டுக் கொண்டதற்கு இணங்க தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமியை ஆக்கிரமித்துள்ளதால் அதனை மீட்டுக் கொடுக்க கோரி தாக்கல் செய்துள்ளார்கள். வேறு என்ன பரிகாரங்கள் கேட்டுள்ளார்கள் என்றால் மின் இணைப்பு, போர்வெல், கட்டிடம் ஆகியவற்றை அத்துமீறி அமைத்துள்ளார்கள் அதற்காகவும் தாக்கல் செய்துள்ளார்கள். எனது தந்தையார் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாமலேயே நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. 20.03.1997 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி எனது தந்தைக்கும் அவரது சகோதரர் செல்வராஜ் என்பவருக்கும் சொத்து பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் மொத்தம் 9 பேர் தரப்பினர்கள் ஆவார்கள். மேற்படி 9 நபர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களின் செக்குப்பந்திகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். செல்வராஜ் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் செக்க பந்து என்ன என்றால் அவரது பூமி எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு மேற்கே உள்ளது. முருகன் பாகத்திற்கு கிழக்கேவும், சரசம்மாள் பாகத்திற்கு தெற்கேவும், 3ம் நபருக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு வடக்கேவும் உள்ளது. நான் சொல்லும் நான்கு எல்லைகள் தவறு என்றால் சரியல்ல.

3. 20.03.1997 பாகப்பிரிவினை பத்திரத்திற்கு மூல பத்திரம் எது என்றால் உள்ளது அது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கில் அளிக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும், எனது தந்தையின் சொத்திற்கு எந்த மூலப் பத்திரமும் கிடையாது என்றும், தவறான செக்குப்பந்திகளை குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை செல்வராஜ் கடந்த

2003 ஆம் ஆண்டு மனை இடங்களாக பிரித்து விற்பனை செய்ய முயற்சி செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. செல்வராஜ் மனை இடங்களாக 2003 ஆம் ஆண்டு பிரித்த பின்னர், லோகநாதன் என்பவருக்கு மனை இடங்களில் ஒரு பகுதியை பொறுத்து கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனது தந்தையாருக்கும் தெரியும் என்றால் சரிதான். மேற்படி லோகநாதன் சொத்தினை கிரயம் பெற்ற பின்னர் சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரிதான். லோகநாதனுக்கு விற்கப்பட்ட ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் தற்போது தான் பார்த்தேன்.

5. லோகநாதனுக்கு சொத்து 2003 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட விவரம் எங்களுக்கு தெரியும் என்ற போது, சொத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் அப்போதே நாங்கள் வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றும், இதிலிருந்தே நாங்கள் பொய்யான சங்கதிகள் உடன் இந்த வழக்கு தாக்கல் செய்கிறோம் என்பது தெளிவாகிறது என்றால் சரியல்ல. லோகநாதனுக்கு விற்கப்பட்ட பூமி, எனது தந்தையாரின் பூமி மற்றும் தடங்கல் ஆகியவை ஒரே புல எண்ணில் தான் உள்ளன என்றால் சரிதான்.

6. லோகநாதன் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்தினை விற்றார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. லோகநாதன் விற்றுள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடங்கல் மற்றும் தடபாத்திய உரிமை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. லோகநாதனுக்கு விற்பனை செய்யப்பட்ட கிரைய பத்திரத்தை செல்லாது என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோராமல், லோகநாதன் விற்பனை செய்த பத்திரத்தை மட்டும் விளம்புகை செய்ய கோர முடியாது என்றால் சரியல்ல.

7. எனது தந்தையாரின் சகோதரர் செல்வராஜ் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். செல்வராஜ் சொத்தினை விற்பனை செய்த மேற்படி லோகநாதன் என்பவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் 10 அடித்தடத்தை தவறாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்படி 10 அடித்தடம் அவர்களுக்கு போதவில்லை என்று லோகநாதனின் மனைவி சரஸ்வதி என்பவரிடமிருந்து கூடுதலாக தடம் கிரையம் பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் சொத்தினை பார்வையிட்ட போது நான் அங்கு தான் இருந்தேன். 10 அடி தடமானது க.ச.194 வழியாக க.ச.188 காலை சென்று க.ச.189 காலைக்கு தடம் உள்ளது என்றால்

சரியல்ல. தடமானது க.ச.189 காலைக்குள் உள்ளேயே சென்று திரும்புகிறது. நான் சொல்வது போல் எந்த தடமும் கிடையாது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9. ஆவணங்கள் எதையும் சரிவர தாக்கல் செய்யாமல் ஆணையர் வரைபடத்தை வைத்து தடம் உள்ளதாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் பல்லடம் நகராட்சியிடம் உரிய அனுமதி பெற்று தான் கட்டிடங்கள் கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் வருவாய் ஆவணங்களையும் சரிபார்த்து சரியாக உள்ளது என்று தெரிந்து தான் சொத்துக்களை வாங்கி உள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஆக்கிரமித்து உள்ளார்கள் என்பதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. லோகநாதன் கிரையம் பெற்ற பின்பு, மேற்படி லோகநாதன் இடமிருந்து கிரையம் பெற்றுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் தான் சொத்தின் சட்டப்படியான சுவாதீனம் உள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தையார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் முழு சொத்தின் விஸ்தீரணம் எதுவும் தெரியாமலேயே, நான் சாட்சியம் அளிப்பது ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.05 18:27:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.